# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.117/2018**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 7<br>Defence<br>Court |
| Name | : | திரு. விஷ்ணு |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of October 2025.

**(Accused absent. Petition filed and allowed. )**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருநெல்வேலியில் வசித்து வருகிறேன். தச்சநல்லூர் மார்க்கெட்டில் கடை வைத்து வியாபாரம் செய்துவருகிறேன். இவ்வழக்கின் எதிரி நல்லமலையை எனக்கு தெரியாது. இவ்வழக்கில் காயம்பட்ட வெள்ளத்துரையை எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, கடந்த 29.02.2016 ஆம் தேதி என் வீட்டிற்கு அருகே குடியிருந்து வரும் ஆலங்குளம் தீயணைப்பு துறையில் வேலைபார்த்துவரும் தட்டாம்பாறை ஊரை சேர்ந்த வெள்ளைத்துரை என்பவர் மாரியப்பன், மணிகண்டன் மகன் சபரிசெல்வம், வெள்ளைத்துரை ஆகிய மூன்று பேரிடமும் உசிலம்பட்டியை சேர்ந்த நல்லமலை என்பவரிடம் ஆலங்குளம், மருதப்பப்புரம் தெய்வசுந்தரபாண்டியன் என்பவரிடம் நல்ல பணம் கொடுத்துள்ளோம் என்றும், அதற்கு அவர் கருப்பு பணம் கோடிக்கணக்கில் தருவதாக ஏழுலட்சம் பணம் வாங்கிக்கொண்டு ஏமாற்றி வருவதாகவும் அவரிடம் இன்னைக்கு தெய்வசுந்தர பாண்டியன் கோடிக்கணக்கில் பணம் தருவதாக சொல்லி, ராஜபாளையம் வரசொல்லியிருக்கிறார்கள் என்றும், அதனால் அவரிடம் இன்னைக்கு தெய்வசுந்தரபாண்டியன் பணத்தை வாங்குவதற்காக தாங்களும் வாருங்கள், உங்களுக்கு ஏதாவது பணம் தருகிறேன் என்று சொல்லி மாரியப்பன் என்பவருடைய TN-72-KK-5017 என்ற டவேரா காரை நான் ஓட்ட, அதில் வெள்ளைத்துரை, தீயணைப்பு துறை வெள்ளைத்துரை, அவருடைய சகோதரர் கணேசன், சபரிசெல்வம் ஆகியோர் அனைவரும் ராஜபாளையம் புது பஸ் ஸ்டாண்டிற்கு மாலை 04.00 மணிக்குசென்றோம் என்றும் எங்களுக்கு பின்னால் TN-01-V-7975 என்ற எண் கொண்ட இன்டிகோ காரை நான் ஓட்ட பின்னால் கேட்டு தெரிந்துகொண்ட திருநெல்வேலியை சேர்ந்த மாரியப்பன் அவரது அண்ணன் மகன் ஸ்ரீரங்கம், அவருடைய அக்கா மகன், நான், சிவா என்ற சிதம்பரம் மற்றும் தெய்வ சுந்தரபாண்டியன் ஆகிய எல்லோரும் ராஜபாளையம் புது பஸ் ஸ்டாண்டிற்கு வந்தோம் என்றும், பிறகு நாங்கள் அனைவரும் ஒன்று கூடி நல்லமலை அவரது காரில் வந்துகொண்டிருக்கிறார், இன்னைக்கு பணம் தரவில்லை என்றால் நல்லமலையை காரில் கடத்திசென்று நம்ம ஏரியாவிற்கு கொண்டு சென்று கொலை செய்துவிட திட்டம்போட்டோம் என்றும், கொஞ்ச நேரத்தில் மாலை 05.15 மணி இருக்கும், TN-59-AH-8679 என்ற போர்டு பிஸ்டா காரில் நல்லமலையும் அவரது டிரைவர் ஜெகதீஷ் என்பவரும் வந்தார்கள் என்றும், அவர்கள் வந்தவுடன் நல்லமலையை தீயணைப்பு துறையை சேர்ந்த வெள்ளைத்துரையும், தெய்வசுந்தரபாண்டியனும் பேசி TN-01-

V-7975 என்ற எண் கொண்ட இன்டிகோ காரில் ஏற்றிக்கொண்டார்கள் என்றும், மற்றவர்கள் எல்லாம் 2 வண்டிகளிலும் ஏறிக்கொண்டு ராஜபாளையத்திலிருந்து சங்கரன்கோவில் வழியாக தட்டாம்பாறை ஊருக்கு வந்து கணபதி தேவர் என்பவருக்கு சொந்தமான தோட்டத்திற்கு நாங்கள் எல்லோரும் 3 காரில் வந்தோம் என்றும், அப்போது தோட்டத்தில் கணபதி தேவர் உட்கார்ந்துகொண்டிருந்தார் என்றும், அங்குள்ள ரூம் ஷெட்டிற்கு முன்னால் உள்ள லைட் வெளிச்சத்தில் நல்லமலையை உட்கார வைத்துக்கொண்டு, நல்லமலையை பார்த்து தீயணைப்பு துறையை சேர்ந்தவெள்ளைத்துரையும், தெய்வசுந்தரபாண்டியனும் மற்றும் கணபதி தேவர் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து கொடுத்த பணத்திற்கும் செக்கிற்கும் என்ன பதில் சொல்கிறாய் என்று கேட்டுக்கொண்டிருக்கும்போது, நல்லமலை அவுட்சைட் போகவேண்டும் என்று சொன்னதால் வெள்ளத்துரை மட்டும் நல்லமலையை கூட்டிக்கொண்டு தோட்டத்திற்கு வடபுறம் கூட்டிக்கொண்டு போகும்போது, நல்லமலை இரவு 08.00 மணிக்கு அவரது இடுப்பில் மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியால் வெள்ளைத்துரையை நோக்கி சுட்டதில் அவருடைய இடது பக்க வயிற்றிலும், இடது கால் தொடை, வயிற்றின் அடிப்பகுதி ஆகிய இடங்களில் குண்டு பட்டு ரத்தம் வந்து சத்தம் கேட்டு தோட்டத்தில் இருந்த எல்லோரும் ஓடிப்போய் நல்லமலையை பிடித்துக்கொண்டு, கையை கட்டிக்கொண்டு தூக்கிக்கொண்டு மீண்டும் ரூம் ஷெட்டிற்கு தூக்கிக்கொண்டு வந்தோம் என்றும், போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi